களஞ்சியம் KALANJIYAM - International Journal of Tamil Studies
International Refereed Peer Reviewed Research Journal
eISSN 2456-5148
Vol. 4 Issue: 03 August 2025

# பேரா. ந. சுப்புரெட்டியாரின் நினைவுக் குமிழிகளில் சமூகமும் பண்பாடும்

## Society and Culture in N. Subbureddiyar's Life

**சு. பாரதி**

*பதிவு எண் 2023PHDPTTM06, முனைவர் பட்ட ஆய்வாளர்(பகுதி நேரம்),*
*தமிழ்த்துறை, திராவிடப் பல்கலைக்கழகம், சீனிவாச வனம்,குப்பம் - 517426*
*ORCID: https://orcid.org/0009 -0002–9012–1174*

**முனைவர் பூ. சு. கணேஷ் மூர்த்தி**

*திராவிடப் பல்கலைக்கழகம், தமிழ்த்துறை, திராவிடப் பல்கலைக்கழகம்,*
*சீனிவாசவனம், குப்பம் – 517426*

***S. Bharathi***

*PhD Research Scholar (PT), Regn No: 2023PHDPTTM06, Department of Tamil, Dravidian University, Srinivasavanam, Kuppam -517426AP, India Email id: bharathibuju@gmail.com, ORCID: https://orcid.org/0009-0007-0953-872X*

***Dr P. S. Ganesh Moorthy***

*Assistant professor, Department of Tamil, Dravidian University, Srinivasavanam, Kuppam - 517426AP, India. ORCID: https://orcid.org/0000-0003-3734-2402*

**Abstract**

From the past to the present, the social and community life, lifestyle, caste, religious differences and cultural changes have been dealt with in the form of people's rituals and worship methods. And culture Culture includes the language, art, literature, religion, history, behaviors, traditions and rituals of a society. Not only that, it also includes the norms and beliefs of the society. Since the Sangam period, Tamil culture has been oriented towards human welfare and has helped to show the way for man to live a good life on earth. Therefore, instead of wasting time in the world of imagination and dreaming many dreams, the ancient Tamils were interested in exploring and understanding the ways to achieve what was relevant to the practical world. They have gained great praise as action figures who achieve nothing, rather than living as dreamers who dream of ambition.

**Keywords:** People's Beliefs, Rituals, Customs, Festivals, Hobbies.

**ஆய்வுச்சுருக்கம்:**

*தற்கால முதல் இக்கால வரை சமூக மற்றும் சமுதாய மக்களின் வாழ்வியல் நிலை, வாழ்க்கை முறை, சாதி, சமய வேறுபாடு மற்றும் கலாச்சார மாற்றங்கள் முறையில் மக்கள் சடங்கு முறைகளும் இறைவழிபாடு முறைகளும் கையாலப்படுகிறது. மற்றும் பண்பாடு கலாச்சாரம் என்பது ஒரு சமூகத்தின் மொழி கலை இலக்கியம் மதம் வரலாறு நடத்தைகள் பாரம்பரியம் சடங்குகள் ஆகியவையே உள்ளடக்கியது. அது மட்டுமில்லாமல் சமூகத்தின் நெறிமுறைகள் மற்றும் நம்பிக்கைகளையும் உள்ளடக்கியது ஆகும். சங்ககால முதற்கொண்டு தமிழ் பண்பாடு மனித நலம் நோக்கு உடையதாக இருந்து வருகிறது மனிதன் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்கு வழி காட்டுவதற்கும் உதவி செய்வதற்கும் சங்க கால சான்றோர்கள் நன்கு உணர்ந்திருந்தன இதனால் கற்பனை உலகில் மூழ்கி பல கனவுகளை காண்பதில் காலத்தை கழிக்காமல் நடைமுறை உலகிற்கு பொருந்துவனவற்றை ஆராய்ந்து அறிந்து அவற்றை அடைவதற்குரிய வழிவகைகளில் நாட்டமுடையவர்களாக பண்டைய தமிழர்கள் விளங்கினர். அவர்கள் லட்சிய கனவு காணும் கற்பனையாளர்களாக வாழாமல் எதையும் சாதிக்கும் செயல் வீரர்களாக பெரும் புகழ்ச்சி அடைந்துள்ளனர். என்ற வகையில் இக்கட்டுரையானது அமைகின்றன.*

**கலைச்சொற்கள்:**

மக்களின் நம்பிக்கைகள், சடங்கு முறைகள், பழக்கவழக்கங்கள், திருவிழாக்கள், பொழுதுபோக்குகள்.

**ஆய்வு நோக்கம்**

சுப்புரெட்டியார் நினைவுக் குமிழிகளிலுள்ள சமூகம் மற்றும் பண்பாடு குறித்து ஆராய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

**முன்னுரை**

மனிதர்களின் பிறப்பு முதல் இறப்பு வரை நாள்தோறும் அவர்கள் எதிர்கொள்ளும் சமூக செயல்பாடுகள், பழக்கவழக்கங்கள் ,கடவுள் நம்பிக்கைமற்றும் வழிபாட்டு முறைகள் போன்றவை அவனை முழுமனிதனாக மற்றுகின்றது. மனிதநாகரீகத்தோடு இவ்வுலகில் அற நெறிகளை பின்பற்றி வாழ்பவர்கள் அரிது. அவ்வகையில் பேரா.ந.சுப்புரெட்டியார் தம் வாழ்நாளில் உலகோர் போற்றும் வண்ணம் நற்பல சேவைகள் புரிந்தார். அங்ஙனம் வாழ்ந்த பேரா.ந.சுப்புரெட்டியாரின் நினைவுக் குமிழிகளிலுள்ள சமூகம் மற்றும் பண்பாடு முறைகள் குறித்து இவ்வாய்வுக் கட்டுரையில் ஆராயப்படுகின்றன.

**சமூகம் விளக்கம்**

ஒரு குறிப்பிட்ட மக்களின் குழுவை ஒன்றிணைப்பதே சமூகம்ஆகும். ஒரே மாதிரியான புவி நிலப்பரப்பில் வாழ்கின்ற ஒரு பெரிய மக்கள் குழுவை சமூகம் எனலாம். அல்லது ஒரே மாதிரியான அரசியல் அதிகாரத்திற்கு உட்பட்ட சமூக மக்கள் குழுவையும் சமூகம் எனலாம். இக்குழுவில் உள்ளவர்களுக்கிடையே தொடர்ச்சியான சமூக உறவுகள் காணப்படும். பலதரப்பட்ட மக்களின் கலாச்சாரம், மொழி, இனம், உணர்வு, பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை ஒன்றிணைத்து வாழ்வது சமூகம் ஆகும். சமூகம் என்பதை புரிந்த அளவில் நோக்கும்போது பல்வேறுபட்ட மக்கள் அல்லது மக்கள் கூட்டத்தை உள்ளடக்கிய சமூகம் மற்றும் தொழில்துறை உள்கட்டமைப்பு எனலாம்.

**நினைவுக்குமிழிகளில் சமூகம்**

பலதரப்பட்ட சமூகத்தைச் சார்ந்த உயர்ந்த மனிதர்கள் பற்றி நினைவுக் குமிழி வெளிப்படையாகவே எடுத்துரைக்கிறது. தனி மனிதர்களை அவர்கள் சார்ந்த சாதியின் பெயரால் சுப்புரெட்டியார் அவர்களே,செட்டியார் அவர்களே, என்று அழைப்பது அக்கால வழக்கமாக இருந்துள்ளது. செட்டியார்கள் பற்றிய சுவையான செய்திகள் பல உள்ளன. சுப்பு ரெட்டியார் சமூகம் பற்றி தமது அனுபவத்தை முன்னிறுத்தி "நான் என் தாய் மாமன் வீடு திரும்பும்போது ஒரு செட்டியார் சிறந்த முறையில் தயாரிக்கும் நெய் வாங்கி வந்து என்னிடம் தந்து விட்டுப் போவார்" என்கிறார். பிராமண சமூகத்தவர்களுள் மிகுந்த நேர்மையுடன் பிறருக்கு உதவும் தன்மை கொண்டவர்கள் வாழ்ந்துள்ளனர். அதே வேளை பிராமணர்களுள் பலர் ஆதிக்க மனப்பான்மையுடன் இருந்திருக்கின்றனர் என்பதை நினைவுக்குமிழிகள் மூலம் அறிய முடிகிறது. பிராமணர்களின் கோட்டை தகர்க்கப்பட பெரியார் நெடுங்காலம் வாழ வேண்டும் என்று சுப்புரெட்டியார் பதிவு செய்கிறார்.

**பேரா. ந.சுப்பு ரெட்டியார் பிறந்த சோழ நாட்டின் சமுதாய அமைப்புகள்**

சோழப் பேரரசு தென்னிந்தியாவின் பெரும் பகுதியை கொண்டு இருந்தது. மேலும், சோழர்களுடைய காலகட்டத்தில் ஆந்திரா, கர்நாடகா, கேரளா போன்ற மாநிலங்களும் அவர்களுடைய ஆட்சிப் பகுதிக்கு உட்பட்டதாக இருந்தது. பொதுவாக ஒரு நாட்டின் சமுதாய அமைப்பில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுவது என்பது இயல்பு. சமூகப் பிரிவுகளை பொறுத்தவரையில் சோழப் பேரரசர் கால சமுதாய அமைப்புகளில் பல ஏற்றத்தாழ்வுகள் இருந்தன. உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்ற வேறுபாடு இவர்களுடைய காலகட்டத்தில் காணப்பட்டது.

சோழ நாட்டு மக்களின் வாழ்க்கை முறை பல சடங்குகள் நிறைந்தவையாக காணப்பட்டன. இதில் திருமண சடங்கு மிக முக்கியமான ஒன்றாக கருதப்படுகிறது. சோழர் காலத்தில் வாழ்ந்த மக்களின் திருமணத்தின் போது மணமகளுக்கு பொன்னும் பொருளும் மணமகன் வீட்டில் இருந்து அளிக்கும் வழக்கம் இருந்து வந்துள்ளது. ஆகவே இவ்வாறு அளிக்கப்படும் பரிசமானது "வதுவை முலைவிலை" என்று அழைக்கப்படுகிறது.

**நம்பிக்கைகள்**

மக்கள் ஜோதிடத்தில் பெரும் நம்பிக்கை வைத்திருந்தனர். ஜோதிட ஆலோசனைகள் பெறப் பணம் நிறைய செலவழித்துள்ளனர்.ஜோதிடர்கள் கூறியது போலவே வாழ்க்கையிலும் செயல்பட்டு வந்துள்ளனர். சுப்புரெட்டியாரது மைத்துனர் வாழ்க்கை அதற்கு உதாரணமாகத் திகழ்கிறது. ஜோதிட நம்பிக்கைகளை வைத்து பிறரை ஏமாற்றி இருக்கிறார்கள். தமது குடும்பமும் அவ்வாறு பாதிக்கப்பட்டது என்பதை சுப்புரெட்டியார் பதிவு செய்துள்ளார். தமது ஜாதகத்தை பார்த்தவர்கள் தமக்கு மக்கட்பேறு கிடையாது என்றும் தான் 37 வயதில் இறந்து விடுவேன் என்றும் கணித்ததாக குறிப்பிடுகிறார்.

**மனிதன் இறுதி சடங்கு முறைகள்**

சுப்புரெட்டியார் பிறந்த நாட்டில் வாழ்ந்த மக்கள் இறந்தவர்களை எரிப்பது, புதைப்பது போன்ற பழக்கங்களைக் கொண்டிருந்தனர். இறந்தவர்களுக்கு திதி கொடுக்கும் வழக்கம் அவர் நாட்டு மக்களிடையே காணப்பட்டது. இறந்தவர்களின் பிறந்தநாளை கொண்டாடும் வழக்கம் அவர் நாட்டில் இன்றும் நிலவி வருகிறது.இறந்தவர்களின் புகைப்படத்திற்கு முன்பு விரும்பிய உணவை படைக்கின்றனர். இறந்தவர்களுக்கு கோவில், சமாதி,நடுகல் போன்றவைகளை கட்டி வைத்து வழிபாடு செய்கின்றனர்.

பண்பாடு விளக்கம்

மனித குலத்தில் பொதுவாக காணப்படுவது பண்பாடு ஆகும். இப்பண்பாட்டை வடிவமைப்பதற்கு இந்திய சமயங்களான இந்து, பௌத்தம்,சமணம் மற்றும் சீக்கிய சமயங்களில் முக்கிய பங்காற்றியுள்ளது. பொதுவாக இவை பொருள் சார்ந்ததாகவும், சமூகம் சார்ந்ததாகவும், கருத்தியல் பண்பாடு, நடத்தை பண்பாடு கொண்டுள்ளது. ஒரு கருத்தை தெரிவிக்கும் அடையாளம் குறியீடு எனப்படும். அவை வண்ணக் குறியீடுகளாக பயன்படுத்தப்படுகின்றன. தமிழ் பெண்கள் அணியும் தாலியும், மெட்டியும், சூடிக் கொள்ளும் பூவும் குறியீடுகள். இவற்றை வெளிப்படுத்துவது பண்பாடு ஆகும். அக உணர்வுகள் வெளிப்படுத்தும் புற பண்பாடு பற்றியும் சமுதாய மாற்றங்களினால் பாதிக்கப்படாத தனித்தன்மை வாய்ந்த பண்பாடுகள் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டுள்ளதை அறியலாம்.

**சுப்புரெட்டியார் கலந்துகொண்ட திருவிழாக்கள்**

கோயில் திருவிழாவை பொறுப்பேற்று நடத்துவது பெருமதிப்பாக இருந்துள்ளது. சுப்புரெட்டியார் பிறந்த பெரகம்பி என்னும் ஊரின் கிழக்கு பக்கத்தில் அரிசன மக்கள் ஏராளமான பேர் வாழ்ந்திருந்தனர். அவர்கள் ஆண்டுதோறும் சித்திரை மாதம் அன்று நடத்தும் முயல்வேட்டைத் திருவிழா கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். அவர்கள் ஆட்டமும் பாட்டமுமாகச் சிலம்பாட்டம் விளையாடுவதும் கத்திவீச்சு செய்வதும் காண்போர் கண்களுக்கு விருந்தாக இருக்கும். காமன் பண்டிகை லாவணி என்ற பெயரிலும் அழைக்கப்படுகிறது. மாசி மாதம் இது பெரகம்பியில் நடைபெற்று வந்துள்ளது. நேராக உள்ள கரும்புகளின் தோகைகள் வெளியில் தெரியுமாறு வைக்கோல் பிரியைச் சுற்றி ஒரு தூண் போலாக்கி நட்டு அதை சுற்றிலும் ஒரு பீடம் அமைக்கப்படும். அது எரிக்கப்படும் வரை நாள்தோறும் விளக்கேற்றப் பெற்றுத் தீபாராதனை செய்யப்படும். மன்மதன் பிரதி வேடம் போட்டு கொண்டு நாள்தோறும் பொருத்தமான பாடல்களை பாடிக்கொண்டு வீடுதோறும் நிதி வசூலித்து வருவர். விழாவின் கடைசி நாளன்று தென்னை இளங்குருத்தோலைகளாலான ஒரு பெரிய தேர் வேயப்பட்டு வைக்கப்பட்டுயிருக்கும். பிறகு காமன் தீக்கொளுத்தப்படுவான். அதாவது வைக்கோல் பிரியாமல் சுற்றப்பட்ட கரும்பு தீ வைக்கப்படும். பிறகு ரதிவேடம் போட்டவர் ஒப்பாரி பாடல் பாடுவார். இந்நிகழ்விற்கு பிறகு வாதம் புரிகிற நிகழ்ச்சி நடக்கும்.

எரிந்த கட்சி ,எரியாத கட்சி ,என்று இரு பிரிவாகப் பிரித்து வாதம் புரிவர். எந்த கட்சியினர் மன்மதன் அழிந்து போய்விட்டான் என்று வாதம் புரிவர். எரியாத கட்சியினரோ மன்மதன் கண்ணுக்கு புலனாகாமல் இன்றும் வாழ்கிறான் என்று சாதிப்பார்கள். இரு தரப்பினருமே தங்கள் பாடல்களைப் பாடி தங்கள் வாதங்களை முன்வைப்பர். விடியும் வரை இந்த நிகழ்ச்சிகளை மக்கள் உறங்காமல் கேட்டுக் கொண்டிருப்பார்கள்.

**கண்ணன் பிறப்பு**

கண்ணன் பிறப்பு திருவிழாவன்று ஊர் முழுவதும் விழா கோலம் கொள்ளும். பல இடங்களில் வீதிகளின் குறுக்கே மாவிலை, வேப்பிலை தோரணங்கள் கட்டப்பட்டிருக்கும். பெரகம்பி என்று அந்த சிற்றூர், வண்ணம் மாடங்கள் சூழ்ந்த திருக்கோட்டியூர் போல் காட்சியளிக்கும். ஆயர்பாடியின் சூழ்நிலை அமைத்துக் காட்டும், ஊர் சிறுவர்களுக்கு ஒரே குதூகலம்,

பெரியவர்கள் பசனை பாடுவார்கள். விழாவன்று காலையிலிருந்து பசனை மடத்தில் சிறுவர்கள், இளைஞர்கள், பெரியவர்கள் கூட்டம் போவதும் வருவதுமாக இருக்கும். மாலை 4:00 மணிக்கே கிருஷ்ணன் படம் சப்பரத்தில் வைக்க பெற்று திருவுல தொடங்கும். கண்ணன் வாகனத்தில் உலா வரும் காட்சியை காண்போரிடம் உற்சாகமும் மகிழ்ச்சியும் இருக்கும்.

**நவராத்திரி விழா**

நவராத்திரி விழாவில் 9 நாளும் பள்ளியில் படிக்கும் மாணவர்கள் வீட்டிலும் கோலாட்டம் நடைபெறும். முன்னரே பெற்றோர்களுக்கு தகவல் தெரிவிக்கப்படும். தெருவழியாக வீடு வீடாக செல்லும்போது கோல்களை தட்டிக் கொண்டு பாடல்களை பாடிக் கொண்டு செல்வர். ஊர் மக்கள் மாணவர்களைப் பார்க்கும்போது மாணவர்களுக்கு உற்சாகம் பொங்கும். சிறுவர்கள் தங்களுடைய வீட்டின் முன் செல்லும் போது கோலாட்டத்தை மிகுந்த சத்தத்துடன் அடிப்பர். இதைக்கண்டு பெற்றோர்கள் மகிழ்ச்சி அடைவார். கோலாட்டத்தில் பங்கு பெறும் அனைவரும் வண்ண காலுறையும் மேலுறையும் அணிந்து கொண்டு ஆடுவது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். இந்நாட்களில் வகுப்புகள் நடைபெறாது. கோலாட்ட பாடல்களை சொல்லித் தருவதும் ஒருவகை "கற்றல் கல்வித்தானே". என்று சுப்புரெட்டியார் நினைவுக்குமிழிகளின் வாயிலாக விளக்கியுள்ளார்.

**சரஸ்வதி பூஜை**

சரஸ்வதி பூஜை அன்று எல்லோருடைய நூல்கள், சுவடிகள், பள்ளிக்கூடத்தில் அடுக்கி வைத்து அதன் மீது கலைமகள் படத்தை வைத்து நான்காம், ஐந்தாம் வகுப்பு, படிக்கும் மாணவர்கள் விநாயகர் அகவலில் சில பாடல்களை பாடுவார்.அப்போது அவல், பொரி, கடலை, நாட்டுச் சக்கரை கலந்து சுண்டல் வடை ஆகியன கலைமகளுக்கு நைவேத்தியமாக படைக்கப்படும்.

**சுப்புரெட்டியார் உணவுமுறைகள்**

இருபதாம் நூற்றாண்டில் திருச்சி வட்டாரத்தில் பெரகம்பியில் சுப்புரெட்டியார் சிறுவயதில் வாழ்ந்த காலத்தில் பெரிய செல்வர்கள் வீடுகள் உட்பட மதிய உணவு கம்பு கேழ்வரகு மாவினால் உணவு செய்தனர். அரிசி, சோறு காண்பது அரிது. தாய்மாமன் வீட்டிலும் இந்த உணவு முறை தயார் செய்தனர்.ஆனால் அவருக்கு மட்டும் அரிசி சோறு, பருப்புகுழம்பு,ரசம் ,போன்றவற்றை தயார் செய்தனர். அவர் மட்டும் இதை உண்பார் இந்த ஊரில் மிகவும் செல்வந்தர் ஒரு செட்டியார். ஏராளமான நிலப்புலன்கள் உள்ளன. இருந்தாலும் வாழ்க்கையில் கடைபிடிக்க வேண்டிய சிக்கனம் என்பது ஒன்று உண்டு. சிக்கனம்வேறு கஞ்சத்தனம், வேறு ,பணம் சேமிப்பதில், சொத்து சேர்ப்பதில் இவருக்கு உள்ள ஆர்வம் பொருளை துய்ப்பதில் இவரிடம் இருந்ததில்லை என்பதை அறியலாம்.

**சமுதாய பழக்கவழக்கங்கள்**

சுப்புரெட்டியார் பிறந்த ஊரில் மரபு ரீதியான பழக்கவழக்கங்களை பின்பற்றிக்கொண்டு வருகின்றனர். சமுதாய நெறிமுறைகளில் சமுதாய ஒப்புதலில் அடிப்படையில் உருவான

பழக்கவழக்கங்களை ஒவ்வொரு மரபினரும் நெறிமுறைப்படுத்தி வாழ்ந்து வருகின்றனர். அவர் காலத்தில் வாழ்ந்த மக்கள் பல வகையான மரபு ரீதியான பழக்க வழக்கங்களை பின்பற்றிக்கொண்டு வந்தனர். குழந்தைகள் பிறந்ததும் அக்குழந்தைகளுக்கு மண் பொட்டு வைத்து நீராடிய பிறகு மருந்து ஊற்றினர். அதன் பிறகு நாளும் நேரத்தையும் வைத்துக்கொண்டு ஜோதிடர் மூலம் கணித்தனர். குழந்தை பிறந்து பன்னிரண்டாம் நாள் குழந்தைக்கு பெயர் சூட்டி மகிழ்ந்தனர். குழந்தைகளை திண்ணை பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட நாளினை பெரிய விழாவாக கொண்டாடினர். அவர் காலத்தில் வாழ்ந்த மக்கள் குழந்தைக்கு தக்க காப்பு அணிவித்தல், அரையான் அணிவிப்பதும் ஐம்படை தாலி போரில் வென்ற பெண்களுக்கு அணிவிப்பதும் வழக்கமாக இருந்தது. அவர் காலத்தில் வாழ்ந்த மக்கள் பன்னிரெண்டு வயது நிறைந்தவுடன் பெண்களுக்கு திருமணம் செய்து வைப்பது வழக்கமாக இருந்தது. திருமணத்திற்கு என நல்ல நாள் பார்க்கும் பழக்கம் இருந்தது. மணமக்களுக்கு தாலி அணிவிக்கும் மரபு பின்பற்றப்பட்டு வந்தது

**முடிவுரை**

ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்க்கை நெறிகளையும் சமூக ஒழுங்கு முறைகளையும் கடைப்பிடித்து வாழவேண்டும். சுப்புரெட்டியரின் நினைவுகுமிழிகளில் உள்ள சமூகம் மற்றும் பண்பாட்டு செய்திகள் குறித்தும் அக்காலகட்ட மக்கள் தங்கள் நடைமுறை வாழ்வில் கடைபிடித்து வந்த பழக்க வழக்கங்கள் வழிபாட்டு முறைகள், ஒழுகலாறுகள் சடங்கு முறைகள், விழாக்கள் போன்றவை குறித்தும் இவ்வாய்வுக் கட்டுரை விரிவாக விளக்கியுள்ளது.

**பார்வை நூல்கள்:**


1. அறிவொளி, சித்தர் பாடல்கள் மூலமும் உரையும், வர்த்தமானன் பதிப்பகம்,2007.
2. அண்ணங்கராசாரியார் நாலாயிர திவ்யப் பிரபந்த உரை, , சண்முகசுந்தரம் பதிப்பகம்,1944
3. சக்திவேல் நாட்டுப்புறவியல், மணிவாசகர் பதிப்பகம் 2019
4. தட்சணாமூர்த்தி தமிழக நாகரீகமும் பண்பாடும், ஐந்திணைப் பதிப்பகம், 1987.
5. ந.சுப்பு ரெட்டியார் நினைவுக்குமிழிகள் பாகம்,1,2,3,4 வேங்கடம் 1990
6. புலியூர் கேசிகன் உரை புறநானூறு,சாரதா பதிப்பகம், 2010.
7. பெரியாழ்வார், பெரியாழ்வார் திருமொழி, ஜனார்த்தன பதிப்பகம்,1936.
8. மு.வரதராசன், திருக்குறள், பாரி நிலையம் ,2014.


*References:*


1. Arivoli,Sittar padalgal moolamum urayum,Vartaman publication, 2007.
2. Annangarasariyar, Nalayira Dhivya prabandha urai, Sanmugasundaram publication,1944.
3. S.Sakthivel, Nattupuraviyal, Manivasagar publication, 2019.
4. Dhatchana Moorthy,Aiynthinai publication, 1987.
5. Na.Subbureddiyar,Ninaivukumiligal Part-1,2,3,4 Venkadam publication,1990
6. Puliyur kesikan urai,Saradha publication, 2010.
7. Periyalvar,Periyalvar Thirumozhi,Janarthana publication,1936.
8. Mu. varadharajan,Thirukural,Pari Nilayam,2014.


License : Copyright (c) 2025 Author : This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.